gistered as a News
paperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு ஆடிமீ ௩௨உ (1946 ஆகஸ்ட் 16 வெள்ளிக்கிழமை) [இல ௩அ

## புதிய சகாப்த உதயம்?

### பொய்யும் புழுகும் கூறும் கொறியா! சீமந்துத் தொழிற்சாலையால் என்ன பயன்?

### இங்கே ஸ்தாபிதமானதன் காரணம் என்ன? பொங்கி வழியும் அநுதாபத்தினுலா?

(''சென்ரினல்'' என்னும் புனைபெயருடன் ஒருவர் பின்வருமாறு எமது ஆங்கில இந்துசாதனத்தில் எழுதுகிருர்)

ஸ்ரீமான் செனனுபக்காவைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் காரியதரிசிகளில் ஒருவர் காங்கேசன் துறைப் பிரதிநிதியான ஸ்ரீமான். நடேசன், இவர் இக்கட்சியிற் சேர்ந்த பின்னர், இலங்கை மந்திர சபையினர் எங்கள் நாட்டுக்குச் செய்துவரும் நன்மைகளையும் அவர்கள் எம்மீது கொண்டுள்ள பரந்த நோக்கம், அன்பு நல்லெண்ணம், என்பவற்றையும், தம் தொகுதியில் வானளாவப் புகழ்ந்து வருகிருர் மந்திர சபையினர் காங்கேசந்துறையிலே, ஓர் சீமந்துத் தொழிற்சாலையை ஸ்தாபிக்க முன்வந்துவிட்டார்கள் இது ஒன்றே சிங்களத் தலைவர்கள் எம்மீது கொண்டுள்ள அநுதாபத்துக்குப் போதிய சான்ருகும் என்றெல்லாம் ஸ்ரீமான் நடேசன் கூறிவருகிறார். ஆனுல் இந்தச் சீமெந்துத் தொழிற்சாலையை மந்திர சபையினர் எங்கள் காங்கேசன் துறையில் ஏன் ஸ்தாபிக்க நிச்சயித்தனர்? எம்மீது கொண்டுள்ள அன்பு பொங்கி வழிந்தோடுவதாலா? இல்லை! இல்லை! அப்படியாக அன்பு வழிந்தோடவில்லை இலங்கை முழுவதிலும் காங்கேசன் துறைதான் இப்படியான சீமெந்துத் தொழிற்சாலைக்கு வாய்ப்பான இடம்; அங்கே சீமெந்து உற்பத்திக்கான, தகுந்த மூலப்பொருள்கள் போதிய அளவில் உண்டு. அத்துடன் அது கடலை யடுத்தது என்ற நியாயங்களை எடுத்துக் காட்டி இங்கிலாந்திலிருந்து இதற்கென வரவழைக்கப்பட்ட நிபுணர்களும், இத்திட்டத்தை நிர்ணயித்த ஏனைய வல்லுநர்களும் ஆணித்தரமாகச் சிபார்சு செய்தபடியாலேயே சீமெந்துத் தொழிற்சாலையை இங்கே நிறுவ மந்திரிசபையினர் இயைந்தனர் அப்படியான நிபுணர்கள் இந்தக் காங்கேசன் துறை ஸ்தாபனத்தைச் சிபாரிசு செய்தபின்னரும், இத்தொழிற்சாலையைத் தென்னிலங்கையிலுள்ள அம்பலாங்கொடையில் நிறுவினுல் என்ன என்று இற்றைக்குஒரு ஆண்டுக்குமுன்னர் ஓர்சிங்களப்பிரதிநிதி அரசாங்க சபையிற் கோரிக்கை செய்தார்: ஆனுல் முதலில்காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலை நிறுவப்பட்டபின், வேண்டுமெனக் கண்டால் அம்பலாங்கொடையிலும் ஓர் சீமெந்துத் தொழிற்சாலையைப் பின்னர்க் காலகதியில் ஸ்தாபிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது இது இவ்வளவில் இருக்க,

### ஓர் பெருர் புளுகு

அன்று சீமெந்துத் தொழிற்சாலைக்கான அத்திவாரக்கல் நாட்டு விழாவின்போது, மிஸ்ரர் கொறியா-எங்கள் தொழில் வர்த்தக மந்திரி - ஓர் பெரும் புழுகைக் கொட்டிவிட்டார். அவர் கூறியதைப் பொய் என்போமோ? புளுகு என்போமோ? அல்லது கட்டுக்கதை என்போமோ? காங்கேசன் துறையில் சீமெந்துத் தொழிற்சாலை நிறுவப்பட்டதும், இந்த நாட்டிலே ஓர் புதிய சகாப்தம் உதயமாகுமென்று மிஸ்ரர் கொறியா கூறினுர். அந்தப் புதிய சகாப்தம் எப்படிப்பட்டது? இந்த இலங்கையிலிருந்து ஆண்டுதோறும் 40 லட்சம் ரூபா சீமெந்துக்காக வெளியே போகிறது. இந்தச் சீமெந்துத் தொழிற்சாலையில் ஆக்கப்படும் சீமெந்து நல்லதாய், புறநாட்டுச் சீமெந்துக்கிணையாய் இருக்குமானுல், ஊரவர் இதனையே அபிமானிக்க இந்த 40 லட்சம் ரூபாவும் வெளியே போகாமல் இந்த இலங்கையிலேயே இருக்கும் என்பது உண்மைதான். இந்த40லட்சம்ரூபாவும்எங்கள்வடமாகாணத்திலேயேதங்கியிருக்கப்போவதில்லை இது இலங்கை முழுவதுக்கும் மிச்சமாகும் எனவே, இச்சீமெந்துத் தொழிற் சாலையினுல், எங்கள் வடமாகாணத்துக்குப் புதிய சகாப்தம் எவ்வாறு உதயமாகப்போகிறது? இதனுல் இந்த மாகாணத்திற்கு என்ன விசேஷ நன்மை கிடைக்கப் போகிறது? இத்தொழிற்சாலை விஷயமான விவாதம் ஒரு ஆண்டுக்கு முன் அரசாங்கசபையில் வந்தபோது, இதில் 2000 தொழிலாளர்க்கு வேலை கிடைக்கும் என மிஸ்ரர் மொலமுரே கூறினுர். இதனைக் கேட்டதும், அம்மம்ம எங்கள் காங்கேசன்துறையில் ஓர் பெருந் தொழிற் சாலையை நிறுவப் போகிருர்கள், ஆயிரக் கணக்கான தொழிலாளர்க்கு வேலை கிடைக்கப் போகிறது! இனி எமக்கு என்ன குறை என்றெல்லாம் ஓர் சிலர் அங்கலாய்த்துக் கனவு கண்டனர் அப்படியெல்லாம் ஒன்றும் நிகழ எங்கள் மந்திரசபையினர் விடமாட்டார்கள் இத் தொழிற்சாலை விஷயமாக மிஸ்ரர் கொறியா அரசாங்கசபைக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையின்படி இங்கே ஆகக்கூடி 16 மேற்பார்வையாளரும், 170 தொழிலாளருந்தான் இருப்பர்! எனவேஇத்தொழிற்சாலை மூலம் ஆயிரக் கணக்கானேர்க்குத் தொழில்கிடைக்குமென எவராவது கனவுகாணவேண்டியதில்லை.

### சீமந்தை உண்பதா?

இந்தச் சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்து ஆக்கப்படும் சீமந்தைக் கொண்டு இந்நாட்டு மக்கள் வீடு கட்டி அழகுற வசிக்கும் அந்த நன் தொடர்ச்சி [illegible]

## ஐம்பம் எதற்கு?

### வழிக்கு வரவேண்டிய காலம் வருகிறது

'மணி''

''விருப்பமானுல் பண்டிதர் நேரு நலலாய் வரட்டும்: அவரை வரவேற்று உபசரிக்க நான் தயார். ஆனுல் அவருடன், இப்போதுள்ள நிலையில் இலங்கை-இந்திய விஷயமாகச் சமரசப் பேச்சுக்களை ஆரம்பித்து ஓர் முடிவு செய்ய முடியாது'' என்று ஜம்பம் பேசுகிருர் அதிகார வெறி பிடித்துள்ள செனனுயக்கா. இப்போதுள்ள அரசாங்கசபை இன்னும் சிலமாதங்களிற் கலைக்கப்படவிருக்கிறது. ஆகவே, இது ஓர் ஸ்திரமான அரசியல் அல்ல, வரப்போகிற புது அரசியற்படி நிறுவப்படும் பாராளுமன்றமே இவ் விஷயமாக ஓர் முடிவைச் செய்ய வேண்டும் என்று செனனுயக்கா கூறுவது ஒருபோதும் பொருந்தாது. சோல்பெரி அரசியலை ஏற்றுக்கொள்ளவும், இன்னும் பல புரட்சிகரமான விஷயங்களை ஆற்றவும் அதிகாரம் படைத்துள்ள அரசாங்கசபைக்கு, இந்திய-இலங்கை விஷயமான ஓர் முடிவு செய்ய ஏன் அதிகாரமில்லை என்று கேட்கிருேம், பாராளுமன்றத் தேர்தலுக்கு முன் சமாசம் ஏற்பட்டால் இலங்கைவாழ் இந்திய மக்களுக்குள்ள வாக்குரிமை விஸ்தரிக்கப்படலாம் அதன் பயனுகப் பாராளுமன்றத்துக்கு இந்தியரின் பிரதிநிதிகள் வந்துவிடக் கூடும். அவர்கள்வந்தால் தான் தலைமைப்பதவி தாங்கமுடியாமல் வந்துவிடும். என்ற ஓர் அந்தரங்க பயத்தினுல் செனனுயக்கா, இப்போது சமாசத்துக்கு வரப் பின்னிற்கிருர் என்பதை இலங்கை முழுவதும் அறியும். எல்லாரையும் எக்காலத்தும் ஏமாற்ற முடியாது என்பதனையும்

இந்தியாவுடன் சமரசம்பேசுதற்குத் தாமே விழுந்தடித்துக்கொண்டு ஓடவேண்டிய ஓர் நிலை வெகுசீக்கிரம் ஏற்படப் போகிறது என்பதனையும் செனனுயக்காவுக்கு இப்போது அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## மிருக மனிதன்!

### மணிக்கு 50 மைல் ஓடுகிருன்

மத்திய கிழக்கு அரபு நாடுகளில் உள்ள டிரான்ஸ் ஜோர்தானில் ஒரு பாலைவனம் அங்குமிங்குமாக அடர்ந்த பல காடுகள் உண்டு அவற்றில் மான், சிங்கம், புலி முதலிய மிருகங்கள் சுதந்தர வேகத்தில் துள்ளி விளையாடும் இக்காடுகளில் ஒன்றிலிருந்து சமீபத்தில் ஒரு நவீன டார்ஸான் கண்டுபிடிக்கப்பட்டான். அராபிய நாட்டு மான் கூட்டங்களுடன் அவன் திரிந்துகொண்டிருந்தான்

நவீன டார்ஸான் 15 வயதுள்ள ஒரு சிறுவன். உண்பதும், கூச்சலிடுவதும் எல்லாம் மானைப்போன்றுதான். புல்லை உணவாகக் கொள்ளுகிருன் அவன். மணிக்கு 50 மைல் வேகத்தில் ஓடும் சக்தி அவனுக்கிருக்கிறது.

நவீன டார்ஸானின் பெற்ருேர் யார் என்பது அவனுக்கே தெரியவில்லை. மனித பாஷைகள் அவனுக்குத் தெரிந்தால் தானே பெற்ருேர் யார் என்பது தெரியும்? யாரோனும் ஒரு பதாயூன் வகுப்பு ஸ்திரீக்கு அவன் பிறந்திருக்கலாமென்றும், அவன்பிறந்தவுடன் அந்த ஸ்திரீ, அவனைக் காட்டில் விட்டிருக்கலாமென்றும் நம்பப்படுகிறது. குழந்தைப் பிராயமுதலே சிறுவன் மான்களுடனிருந்து வருவதால் மானின் குணங்களும், பழக்க வழக்கங்களும் அவனுக் கேற்பட்டிருக்கின்றன வெனக்கருதப்படுகிறது.

## சங்கக் கடைகள் நிலைமை

### அவற்றுக்கருகே முளைத்து வரும் சில்லறைக் கடைகள்

### சங்கக்கடை ஊழல்களை மறைக்கும் மர்மம்

(நமது நிருபர்)

அரசாங்கத்தார் பல பொருள்களின் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது இந்த விலைக்கு அதிகமாக எப்பொருளையேனும் ஓர் வியாபாரி விற்ருல், அவர்க்கு எதிராக அரசாங்கம் வழக்குத் தொடர்ந்து சில சமயங்களில் ஆயிரக்கணக்கில் அந்த வியாபாரி அபராதமும் விதிக்கப்படுவர். தனி வியாபாரிமார் விஷயத்தில்தான் இந்தக் கட்டுப்பாடு உண்டா? இந்தக் கட்டுப்பாடு அரசாங்கத்தின் ஆதரவையும் அபிமானத்தையும் பெற்றுள்ள சங்கக் கடைகள் விஷயத்திலும் உண்டா? இந்தப்பிரச்சினை இப்போது கிளம்பியிருக்கிறது.

இற்றைக்குச் சில காலத்துக்கு முன் கொழும்பில் உள்ள ஓர் சங்கக் கடை 47 சதம் விற்கவேண்டிய ஓர் பொருளை 66 சதத்துக்கு விற்றுக் கையும் மெய்யுமாகப் பிடிபட்டது. அச்சங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை என்ன? ஓர் கண்டிப்பான எச்சரிக்கை; அவ்வளவுதான். இந்தக் கடைக்கு விரோதமாக ஏன் வழக்குத் தொடரவில்லை? இதன் ஊழல்களை அரசாங்கம் ஏன் மறைத்து வைத்திருக்கிறது?

சங்கக் கடைகளில் உள்ள அநேகம், அங்குள்ள மானேஜர், விற்பனவுகாரன் என்பவர்கள் மூலமாக சோர வர்த்தகத்தில் ஈடுபட்டுத் தவித்த முயல்அடிக்கின்றன என்றுஇத்யாழ்ப்பாணத்திலும் அநேகம் முறையீடுகளை ஊரவர் கூறுகிருர்கள். இச் சங்கச் கடைகளிற் பல கள்ள வர்த்தகத்தின் உயிர்நாடிகளாய் விளங்குகின்றன. லங்கா துணிகள்போன்ற அரிய பொருள்கள் இக்கடைகளுக்கு வந்தவுடன் அவை எவ்வாருேதிடீரென்று மறைந்துவிடுகின்றன அல்லது ''இன்னும் லொத்தர் போடவில்லை'' என்ற மறுமொழி தினந்தோறும் வருகின்றது. சில சங்கக் கடைகளுக்கருகே ஒன்றிரண்டு சில்லறைக் கடைகள் பலவிடங்களில் முளைக்கின்றன. இந்தச் சில்லறைக் கடைகளில் பல பொருள்களை விற்க அனுமதி இல்லை என்ருலும், அவற்றில் இப்பொருள்கள் எவ்வாறு வந்து குவிகின்றன என்பது மர்மமாக இருக்கின்றன. ஆனுல் பல சங்கக்கடைகளில் உள்ள மானேஜர், விற்பனையாளர் என்பவர்களுக்கும் இந்தச் சில்லறைக் கடைகளுக்குமிடையே அந்தரங்க தொடர்பிருப்பது பலரும் அறிந்துள்ள [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியவுூ
ஆடிமீ ௩௨ உ வெள்ளிக்கிழமை

## நெறியான முறை

இந்தியாவிலே சுயராச்சியத்தைத் தாபிக்கும் காலத்திற்கும் இக்காலத்திற்குமிடையே கைக்கொண்டு நடத்தவேண்டியதாகிய இடைக்கால அரசியலை நிர்வகித்து நடத்தும் பொறுப்பையுத்தேசித்து இந்திய பிரதிகாவலராகிய லார்ட் வேவல், அரசசக்கரவர்த்தியின் அநுமதியோடு இந்திய காங்கிரஸ் என்னும் மகாநாட்டுத் தலைவராகிய பண்டிதர் ஜவஹர்லால் நேருவைக் கேட்டிருந்தார்; நேரு அவர்கள் தக்கவாறு ஆலோசனை செய்த பின்இந்திய பிரதிகாவலருடைய வேண்டுகோளுக்கு இணங்கலாயினர். இந்த நல்ல சமாசாரம், இந்திய மக்கள் பூரண சுதந்திரத்தை விரைவிற் பெறவேண்டுமென்ற நீதியான ஆவலோடு கூடியிருந்தவர்களாகிய உலக மக்களெவருக்கும் பேரானந்தத்தை விளைக்குமென்பது நிசம்; நேரு இதற்குச் சம்மதித்துக் கொண்டாரென்ற செய்தி லண்டன் நகரிற் கிட்டியபோது அங்குள்ள அரசியல் அதிகாரிகள் அரசியல் நிபுணரா யுள்ளவர்களெல்லாரும் மகிழ்ச்சியடைந்து, இனி விரைவில் இந்தியா சுயராச்சியத்தைப் பெறுமென்று பேசிப் பாராட்டினர்களாம்.

இந்த இந்திய மகாநாட்டினர் ஐம்பத்தைந்து அறுபதுக்கு மேற்பட்ட வருடகாலமாகத் தம் பாரதநாடு சுயராச்சியம் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு பட்டபாடும், உழைத்த உழைப்பும் செய்த பொருட் தியாகம் உயிர்த் தியாகம் சிறைவாசம் முதலியனவும் கொஞ்சமல்ல; உலகத்திலே வேறு எந்தச் சாதி மக்களாக, எத்தேச மக்களாக சுயராச்சியத்தின் பொருட்டு இப்படியான இன்னல்களை எக்காலத்தாயினும் பட்டனரெனத் தேச சரித்திரங்களிற் சொல்லப்படவில்லையாம்; தாய்நாட்டின் பொருட்டு ஈடேற்றத்தை உத்தேசித்துத் தம் மூயிரைத்தானும் அர்ப்பணஞ் செய்த அரும்பெறற் புதல்வர்களைப் பெற்றவளும் பாரததேவியே யாவாள்; மேலும் இந்திய மக்கள் உலகத்திலே இரண்டு மகா யுத்தங்கள் நடந்த காலத்திலும், மேலைத்தேசம் முழுவதும் கிழக்கிலுள்ள யப்பானும் பூமியாசை அதிகாரவெறி யென்னு மிவற்றைக் கொண்டு அதர்மமான பொல்லாத யுத்தங்களை யெல்லாஞ் செய்து வந்த காலத்திலும், இந்தியமக்கள் தம் நாட்டின் சுயாதீனத்தைப் பெறுதற்கு அகிம்ஸா தருமத்தை யாயுதமாகவும் சாத்விக முறையையே போராக சம்மதம்[illegible]வுங் கொண்டு முயற்சி செய்து வந்தனர்.

முற்காலத்திலே தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து மந்தர மலையை மத்தாகவும் வாசுகியை நாணாகவுங் கொண்டு, அமிர்தத்தை வேண்டிப் பாற்கடலைக் கடைந்து ஒருவாறு அந்த அமிர்தத்தைப் பெற்றனரென்று புராணங்கள் புகலும்; ஆனால் எங்களுடைய பிரித்தானியராகிய வெண் கடலிலே இந்திய மக்கள் பூரண சுயராச்சியமாகிய அமிர்தத்தைப் பெற வேண்டி, மேலே சொல்லப்பட்ட அகிம்ஸா தருமமாகிய மத்தைக் கொண்டு சாத்வீக எதிர்ப்பென்னும் நாணைப் பூட்டிப் பல வருடங்களாகக் கடைந்தும் இப்பொழுதுதான் அந்தச் சுயராச்சியமாகிய அமிர்தம் திரளும் பருவங் கைகூடுகின்றதெனலாம்; பாற்கடலிலே தோன்றிய அமிர்தத்தைப் பெற்றுப் பகிர்ந்து அக்காலத்திலே கொடுத்தவர் மகாவிஷ்ணுமூர்த்தி யென்பர்; இப்பொழுது இந்தச் சுயராச்சியமாகிய அமிர்தத்தைப் பகிர்ந்து கொடுப்பதற்காகிய கடமையைப் பூண்டவர் பண்டிதர் ஜவகர்லால்நேரு அவர்களென்றே எண்ணக்கிடக்கின்றது.

அக்காலத்திலும் அமிர்தத்தைத் தேவர்கள் பெறுவதற்கிடையில் விஷந் தோன்றியமை முதலியபலகஷ்டங்கள்நேர்ந்தன இக்காலத்திலும் இந்திய சுயராச்சியமாகிய இந்த அமிர்தத்தைப் பெறுதற்கு ஜின்னு முதலிய முஸ்லிம்லீகர்என்னும்ஒரு பாலரால்இடையூறுகள் நேரலாயின; ஜின்னுவின் கட்சியார் "நட்டாலும் நண்பல்லார் நண்பல்ர்" என்னும் நிலையில் நிற்கிறார்கள்; இந்திய மகாநாட்டினர் ஜின்னுவின் கேள்விகளுக்கு இசைந்தாலும், ஜின்னுவும் அவர்கட்சியினரும் மனரம்மிய மடைவதாகப் புலப்படவில்லை; ஜின்னு துரியோதனன் நின்றநிலையில் நிற்கின்றாரெனல் மிகையாகாது.

மேலும் காவற் கடவுளாகிய திருமால் பாற்கடலிற் பிறந்த அமிர்தத்தைப் பகிர்ந்தபோது, அசுரர்களைப் புறக்கணித்துத் தேவர்கட்கே கொடுத்தாரென்றும், இரு அசுரர் தாமும் அமிர்தத்தை யுண்ணவேண்டித் தேவர் குழுவுட் புகுந்து கரந்திருந்து பெற முயன்றபோது நாராயணமூர்த்தி அவர்கள் தலையைச் சட்டுவங் கொண்டு சேதித்தாரென்றும், அவர்களே இராகு கேதுக்களென்னுங் கிரகங்களென்றும் புராணங்கள் சொல்லும். தெய்வச் செயலுக்கு நாம் காரணங் காட்டுதல் இயலாதென்பது நிசம் ஆனால் இப்பொழுது பண்டிதர் ஜவஹர்லாலவர்களெனிலோ, இச் சுயராச்சியமாகிய மருந்தை இந்துக்கள் இஸ்லாமியர் இந்தியாவிலுள்ள ஏனைய சாதியினரென்ற பேதம் பாராது எவர்க்கும் ஒரே பெற்றித்தாய்ப் பகிர்ந்து கொடுக்க முற்பட்டுள்ளார் இதற்கு ஜின்னுவின் கட்சியினர் மாறாக நிற்பது தற்கொலை புரியுஞ் செயல் போலாகும். இந்திய சுயராச்சிய கருமம் இந்தமுறை அநுகூல முறுமென்பதே பலர் கொண்ட நம்பிக்கையெனலாம்; ஆயினும் திருவருட் [illegible]

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—112)

"கைவினை கரவேல்"

மாகாளி தேவியைப்போல் வேடமிட்டு அத்தேவி சொல்வது போற் சொன்னமையினால், அத்தேவியின் ஆவேசம் என்னிடத்தில் ஒரு சிறிது உண்டாகி, என்மானத்தையும் காத்ததென்றால், உண்மையாக அந்த மாகாளித் தாயைப் பூசித்து உபாசித்துவரின் எனக்கு எவராலும் எக்காலத்தும் எவ்வகையான இடரும் நேராதென்று துணிந்தேன்; பத்திரையின் திருவுரு வரையப்பட்ட படமொன்றைத் தேடி வைத்து அநுதினமும் அத்தேவியைப்பூசித்துத் தோத்திரஞ் செய்து வரலானேன்; வீட்டிலுள்ள ஐயர் அன்றுதொடக்கம் என்னுடன் பயபத்தியாக ஊடாடினார்; அந்த ஐயர் அபிமானித்து வரும் தாசிவீட்டிற்குரிய கிழவியும் அவள் வளர்க்கும் மகளுமாகிய இருவரும் என்னைப் பார்க்க விருப்பி ஒருநாள் நான் இருக்கும் வீட்டிற்கு வந்தார்கள்: தாசிக்கிழவியின் விஷயம் ஒருபுறமிருக்க, அவளுடைய அபிமான புத்திரியாகிய அந்த இளம்பெண் அழகுடையவள்; சங்கீதம் பரதநாட்டியமென்னுமிவைகளை முறைப்படி கிரமமாகக் கற்றவள்; அழகிலும் சங்கீதத்திலும் நாட்டியத்திலும் சிறந்தவளென்ற பேர் அந்தவூரிலே அவளுக்கு உண்டு; வயசு இருபதிற்கும் இருபத்தைந்துக்குமிடையில் மதிக்கலாம்; எவரோடும் இதமாகப் பேசவும் விநயமாக ஊடாடவும் பயின்றுள்ளவள்; என்னை முந்தியே யறிந்து என்னுடன் பழகியவள்போல் அளவளாய் அன்புடன்வார்த்தையாடினாள்: ஊடாடிய விநயத்தையும் பேசிய இதத்தையும் பாராட்டிய அன்பையுங் கண்டு நானும் அந்தப் பெண்ணிடம் அன்பு பூண்டேன்; அவள் என்னைப் பார்த்து "அம்மா, நீங்கள் நல்லாகப் பாடுவீர்களாமே; உங்கள் பாட்டைக் கேட்க ஆசைப்பட்டு இங்கு வந்தேன்" என்று பணிவுடன் சொல்ல, சங்கீத விஷயமாக எனக்கென்ன தெரியும்; பாடுவாரைக்கேட்டு நானும் சிறிது பாடத் தெரிந்துள்ளேனல்லாமல், உய்மைப்போல முறையாசப் பாடவும் ஆடவும் நான் அறியேன் என்று சொல்ல, 'ஆம், அம்மா. அப்படித்தான் விஷயம் அறிந்தவர்கள் அவையடக்கஞ் சொல்வார்கள்; ஏதோ நான் கேட்க விரும்பி வந்தேன்; இனி உங்கள் இஷ்டம்; என்னை ஏதும் பாடச் சொன்னால் உடனே அறிந்ததைப் பாடிவிடுகிறேன்" என்று அந்தப்பெண் சொன்னாள். அந்தப் பெண் கேட்க, எனக்கு மறுக்க மனம் வரவில்லை; அல்லாமலும் 'கைவினை கரவேல்" என்பது மூதாட்டி வாக்கல்லவா; அதனையும் நினைத்தேன்.

### "உண்மையோ, உபசாரமோ நானறியேன்"

உடனே இலட்சுமியைக் கொண்டு என் யாழை எடுப்பித்துச் சுதி கூட்டித் தேவி மேல்:

'பேதாதிபேசம் பிறந்த வுயிர்த் தொகைக்
கோர்
ஆதாரமாகி யவைவை யறிந் தளித்தாய்
ஓதா மறைநூ லுடநிடதத் துண்மயமாம்
பாதார விந்தம் பெறப் பெற்றேன் பாத
கனே."

என்னும் தோத்திரத்தைப் படித்துப் பின்னர் முருகக் கடவுள் பேரிற் சில கீர்த்தனங்களையும் அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தில் ஒரு சிந்தினையும் பாடி முடித்தேன்; என் பாட்டைக் கேட்கும் போதெல்லாம் அந்தப் பெண் ஆநந்த மூற்றுத் தலையசைத்தாள்: நன்றாயிருக்கின்றதென்றாள். அப்படிச் செய்தமையும் சொன்னமையும் உண்மையோ, உபசாரமோ, நானறியேன்; பாடிமுடித்தவுடனே அப்பெண் என்னைப் பாராட்டிவிட்டு நான் சொல்லாமலிருப்பவே, தானாக என்னிடத்திலுள்ள யாழை வாங்கி மீட்டிப் பாடினாள்; கேட்டுக்கொண்டிருந்த எனக்கும் ஏனையோர்க்கும் அப்பாக்கள் கர்ணாமிர்தமாக விருந்தன; சரசுவதியின் அமிசமோ என்று ஐயங்கொண்டேன்; பாடி முடித்தபின், உமது பரதநாட்டியத்தை நான் பார்க்கலாமா எனக் கேட்க, நூறுமுறையும் பார்க்கலாம்; ஆனால், பக்கவாத்தியகாரர் இங்கு ஆயத்தமாயில்லையே; எங்கள் வீட்டிற்கு ஒருமுறை வந்தாற் செய்துவைக்கிறேன்; இல்லையேல் அவர்களையுங்கூட்டிக்கொண்டு நீங்கள் குறிக்கும் நாளில் இங்குவந்து செய்கிறேன்" என்று அந்தப் பெண் அன்புடன் சொன்னாள்; ஆத்தாளும் ஐயாவும் அநுமதி தந்தால் உங்கள் வீட்டிற்கு வர எனக்கு எவ்வகையான தடையுமில்லை யென்றேன்; கேட்டபோது அந்தப் பெண்ணுக்கும் தாய்க் கிழவிக்கும் உண்டான மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையில்லையெனலாம். "அம்மா, ஆத்தாளும் ஐயாவும் அநுமதிதந்தால் இப்பொழுதே புறப்பட்டு எங்கள் இரதத்தில் வீட்டிற்கு வருவீர்களா என்று அந்தப் பெண் வினவ, "ஆம்" என்றேன். உடனே கிழவியும் அந்தப்பெண்ணும் எழுந்து ஐயர் இருக்குமிடம் போய் அவருக்குச் செய்தியைச் சொல்லி அவர் உத்தரவைப் பெற்றுக்கொண்டு, அப்படியே ஆத்தாளிடம்போய்ச்சொல்லி ஆத்தாளின் அநுமதியையும் பெற்றுக்கொண்டு வந்து எனக்குத் தெரிவித்தார்கள்; நானும் உடனே யெழுந்து ஆத்தாளிடம் போய் விஷயத்தைத் தெரிவிக்க, "மகளே, உமக்குத்தானே, காளிதேவியின் அநுக்கிரகமாகிய கவசமிருக்கிறது; நீர் உமக்கு இஷ்டமானாற் போய்வரலாம்" என்று சொல்ல, நானும் உடன்பட்டு இலட்சுமியையும் உடன் கூட்டிக்கொண்டு அவர்களுடைய இரதத்திலேயே ஏறி அவர்கள் வீட்டிற் போய்ச் சேர்ந்தேன்; சேர்ந்தவுடன் அவர்கள் காட்டிய பரிவும் எனக்குச் செய்த உபசாரமும் சற்றல்லவெனலாம். சிறிதுநேரத்துள் அந்தப்பெண் அங்கே பக்க வாத்தியகாரரை வரச்செய்து தன்பரதநாட்டியத்தை ஆடிக்காட்டினாள். அற்புதமாக விருந்தது; அப்படியான நாட்டியத்தை முன் எவரேனுஞ் செய்ய நான் கண்டதில்லை; அவர்கள் தங்கள் வீட்டிற்கு நான் வந்தமையையிட்டு நன்றி கூறி, பழையபடி என்னையும் இலட்சுமியையும் இரதத்தில் ஏறச்செய்து தாங்களும் உடன்வந்து எங்கள் வீட்டில் இறக்கிவிட்டுச் சென்றார்கள்; அன்று தொடக்கம் அவர்கள் விரும்பியநேரம் நான் அங்கு போவதும் அந்தப் பெண்ணுடன் கலந்து சங்கீதம் பாடுவதும் பரதநாட்டியஞ் செய்வதும், நான் விரும்பியநே[illegible] அந்தப் பெண் தாய்க்கிழவியுட[illegible] எங்கள் வீட்டிற்கு வருவதும் சங்கீதம் பாடுவதும் போவதும் உண்டு.

### உம்முடைய நாமதேயமென்ன?

நமக்கு ஏதோ ஒரு வித்தை தெரிந்திருப்ப நாம் ஒருவரிடத்துச் சும்மா உண்பது சரியல்லவென என்னளவில் நிச்சயித்துக்கொண்டு, இடையிடையே சங்கீதம் பரதநாட்டியஞ் செய்து பொருள்தேடி ஐயருக்குக் கொடுத்துவந்தேன்: அப்படியான சந்தர்ப்பத்திலேதான் ஒரு நாள் இரவு என் சங்கீதத்தைக் கேட்கும்படி இந்தப் பிரபு அங்கே வந்தார் [என்று இராமச்சந்திரனைச் சுட்டிக் காட்ட, இராமச்சந்திரன் பெயரப்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் அவமானம்!

## எம் நாட்டிற் குற்றம் மலிவது ஏன்? ஊரவர் கொண்டுள்ள மனோபாவம்!

### பொலிசார் — ஊரவர் ஒத்துழைப்பு அவசியம்

—:—

("ஸ்ரீதரன்" எழுதுவது)

தூய ஒழுக்கங்களில், சமய வாழ்க்கையில் தலைசிறந்தது, இலங்கையின் மற்றும் பாகங்களுக்கே வழிகாட்டியாகவுள்ளது என ஓர் காலத்திற் பெயரெடுத்த எங்கள் வடமாகாணம் இன்று குற்றம் மலிந்த நாடாகிவிட்டது. இதனைத் தக்க விபரங்களுடன் இலங்கைப் பொலிஸ்பகுதி யதிகாரி தம் பரிபாலன அறிக்கையிற் குறிப்பிட்டிருக்கிறார். இதனையிட்டு நாம் ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும். இந்த மாகாணத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் இது தீரா இழுக்குத் தரக்கூடிய விஷயம் என்பதை நாங்கள் எங்கள் மனத்திற் சிந்திக்க வேண்டும்.

குற்றங்களைத் தடுப்பதில் பொலிசார் ஓரளவுக்கு உதவி செய்யலாமேயன்றி, அக்குற்றங்களைத் தடுக்கவோ அவற்றைக் குறைக்கவோ அவர்களால் தனியே முடியாது. ஊரவர்களின் ஒத்துழைப்பும் உதவியும் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும். இந்த உதவியை, இந்த ஒத்துழைப்பை யளிப்பதில் இந்த மாகாணத்து மக்கள் தவறிவிட்டனர் என்பதே பொலிசாரது முறையீடாகும். இந்த முறையீடு நியாயமானது என்பதை நாம் ஒவ்வொருவரும் ஒத்துக்கொள்ளுதல் வேண்டும்.

ஓர் நாடு சீராகவிருக்கவேண்டுமானால் அந்நாட்டு மக்கள் தாம் ஒவ்வொருவரும் அந்நாட்டின் இன்றியமையா அங்கம் என்பதைமனப்பூர்வமாக உணர்ந்து பரஸ்பரம் ஒற்றுமை பூண்டு மறத்தைக் கெடுத்து அறத்தை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் ஒருவன் ஒரு தீங்கைச் செய்தால் அத்தீங்கு குறிப்பிட்டஒரு சிலர்க்கு மாத்திரமல்ல, அந்தச் சமூகம் முழுவதையுமே பாதிக்கும் என்பதை உணர்ந்து, தீங்கு செய்தோனைத் தண்டித்து அவனை நல்வழிப் படுத்தும் கைங்கரியத்தில் அரசாங்கத்துடன் பூரணமாக ஒத்துழைத்தல்வேண்டும்; கேவலம் பண வருவாய் காரணமாகவோ, அல்லது "ஆரோசெத்தால் ஏனோ அழுவான்" என்ற மனப்பான்மை காரணமாகவோ, எவராவது பராமுகமாயிருக்க வொண்ணாது.

இந்த விஷயத்திற் பொதுஜன சேவையை லட்சியமாகக் கொண்டுள்ள சங்கங்களும் சபைகளும் வழிகாட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். குற்றங்கள் வளர்வதால் நாட்டுக்கும் சமூகத்துக்கும் நேரிடும் தீமைகளை விளக்கிக், குற்றங்களைத்தடுக்கும் விஷயத்தில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி இந்தச் சபைகளும் சங்கங்களும் பொதுமக்களுக்கிடையே பிரசாரம் செய்து அவர்களுக்கு உண்மை நிலையை விளக்கவேண்டும்; இந்த வேலையில் சைவ மக்களாயுள்ளார்க்குத் தனிப் பொறுப்பு ஒன்று உண்டு என்பதை நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். இந்த வடமாகாணத்திற் குற்றங்கள் வளர்வது எங்கள்சமயத்துக்கே இழுக்காகும் என்பதைச் சைவ மக்கள் ஒவ்வொருவரும் உணர்வாராக: பஞ்சமாபாதகங்களையும் அறவே ஒழித்து, "அன்பே சிவம்" என்ற மகத்தான கொள்கையைப் பூண்டு அஹிம்சைவழி நிற்கவேண்டிய சைவத்தமிழ் மக்களுக்கிடையே இப்படிக் குற்றங்கள் வளர இனியும் விடவொண்ணாது; எமது சைவ ஸ்தாபனங்கள், கண்மூடிக்கொண்டு கிடந்தது போதும். எங்களுக்கு நேர்ந்துள்ள மாசினைப் போக்கி மக்களை அஹிம்சை வழியிற் செலுத்தக் கங்கணம் கட்டிக் கருமம் ஆற்றவேண்டும் என்று அவற்றின் நிர்வாகிகளைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இனிப் பொலிஸ் பகுதியார்க்கும் இவ்விஷயமாக ஒன்று கூற விரும்புகிறோம். ஒத்துழைப்பு, உதவி என்று வெறுமனே கூறுவதாற் பயனில்லை. இப்போது உள்ள பொலிஸ் நிர்வாக அமைப்பு முற்றிலும் பிழையானது என்பதே எமது அபிப்பிராயம் பொலிசார் என்றால் ஏதோ ஒருவிதமான பிராணிகள் என்று ஊரவர்கள் மதித்து, அவர்களைத் தூரத்தில் வைத்து நடாத்தும் ஓர்நிலை இன்று இந்நாட்டில் உண்டு. பொலிஸார் ஊரவர்க்காக ஏற்பட்ட ஊழியரேயன்றி அவர்களை வெருட்டவோ, இம்சிக்கவோ நியமிக்கப்பட்ட ஜெந்துக்கள் அல்ல என்பதை ஊரவர் ஒவ்வொருவரும் உணர்ந்து, அவர்களுடன் ஒத்துழைக்கக்கூடிய ஓர் நிலையை ஏற்படுத்த வேண்டும். பொலிஸ் நிர்வாகம் சம்பந்தமான விசாரணைபுரிந்துவந்துள்ள சபையினர் இவ்விஷயமாக ஏதும் மகத்தான மாறுதல்களைச் செய்வர் என எதிர்பார்க்கிறோம். 'இந்தா பொலிஸகாரன் வருகிறான்' என்று எம் நாட்டுக் குழந்தைகளுக்கு "உம்மாண்டி" காட்டும் ஜெந்துவாகப் பொலிசாரை வைத்திருக்காமல், அவர்களும் சாதாரண மனுஷர்தான் என்ற ஒரு மனப்பான்மை ஊரவர் மனதில் ஏற்படும் நிலையை இந்த விசாரணைச்சபையினர் ஆக்குவர் என எதிர்பார்க்கிறோம்.

---

### தாய்மையின் பெருமை

"இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் கடவுளைத் தந்தையாகவே வணங்குகிறார்கள். 'பரமண்டலத்திலிருக்கும் எங்கள் பிதாவே' என்றுதான் கூறுகிறார்கள். ஆனால் ஹிந்து மதத்தினர். கடவுளைத் தந்தையாகவும் தாயாகவும் போற்றுகின்றனர். இந்தியாவில் வழங்கப்படும் எல்லாப் பாஷைகளிலும் 'தாய்' என்ற பதம்தான் மிகவும்புனிதமானது. எம் நாட்டில், சாதாரணமாக ஒருவர் நோயினால் அவஸ்தைப் படும்போது அவர் 'அம்மா' 'அம்மா' என்றுதான் சொல்லுகிறார். இது அவருடைய ஹிருதயத்திலிருந்து வருகிறது இந்த 'அம்மா' என்ற ஒரு வார்த்தையினால் அவர் தன் துன்பத்தை எல்லாம் மறக்கிறார்; சாந்தியடைகிறார்,"

—சுவாமி ராம் தீர்த்தர்.

---

### சீனி வருகை

இம்மாத இறுதியில் 6000 தொன் சீனி மோறினியஸ்தீவில் இருந்து இலங்கைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது இந்த மாதம் 25-ம் திகதி வரைக்கும் போதிய சீனி இப்போது உண்டு, மோறினியஸ் தீவில் இருந்து நாம் எதிர்பார்க்கும் சீனி வராவிட்டால், சீனி நிலைமை மீண்டும் நெருக்கடியாய்விடும் என உணவுக் கட்டுப்பாட்டதிகாரி ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினார்.

---

## சந்தோஷமாம்

### சேனநாயக்காவின் ஆசி

இலங்கை அரசாங்கசபை முதல்வர் ஸ்ரீ டி. எஸ். சேனநாயகாவுடன் ஓர் பத்திரிகைப் பிரதிநிதி சம்பாஷித்தபொழுது அவர் பின்வருமாறு அபிப்பிராயந் தெரிவித்தார்:—

"இந்தியாவில் இடைக்கால அரசாங்கத்தை நிறுவும்பொறுப்பை பண்டிதர் ஜவஹர்லால்நேரு ஏற்றுக்கொண்டிருப்பதைக்கேட்க நான் பெரிதுஞ் சந்தோஷப்படுகிறேன். அவருடன் முஸ்லிம் லீக்கும் ஒத்துழைத்து இந்தியாவுக்குச் சுயாட்சியை அளிக்கக் கூடிய அரசியற் திட்டத்தைத் தயாரிப்பதில் உதவி புரியவேண்டும் என நான் மனப்பூர்வமாக விரும்புகின்றேன், இந்திய சரித்திரத்தின் அதிமுக்கியமான இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவுக்கு என் நல்லாசியைத் தெரிவித்துக் கொள்ளவும் விரும்புகிறேன்,"

---

### "நாங்களும் அணுக்குண்டுப் பரீட்சை செய்வோம்"

இதுகாறும் அணுக்குண்டு விஷயமாக அமெரிக்கா செய்துவந்த பரீட்சைகளைப் போலும் ருஷியரும் செய்யப்போகிறார்கள் என்று சோவியத் விஞ்ஞானி ஒருவர் கூறுகிறார்.

---

## ஒற்றுமை

### வேண்டும் என்கிறார் சிங்களப் பிரதிநிதி

இலங்கை அரசாங்கத்தின் 1946-1947 ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் சம்பந்தமான விவாதம் சென்ற செவ்வாய்க்கிழமை தொடக்கமாக அரசாங்கசபையில் நடந்து வருகிறது.

இந்த விவாதத்தின்போது பேசிய ஹாவான்வலைப் பிரதிநிதி மிஸ்டர். R. E. ஜெயத்திலகா, இலங்கை — இந்தியப் பிரச்சினையையும் குறிப்பிட்டுப் பின்வருமாறு பேசினார்:—

"இலங்கை இந்தியப் பிரச்சினை இன்று எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கும் முக்கியப் பிரச்சினையாகும். இதை இந்தியாவுடன் நேசபான்மையான முறையிலே தீர்த்துக்கொள்ளுவது அத்தியாவசியம். இன்றை உலகில் எந்தத் தேசமும் தனித்து நிற்க முடியாது ஆகையால் இந்தியாவுடன் நேச உறவை வைத்துக்கொண்டிருப்பது அத்தியாவசியம். அகில உலகிலும் தேசிய மனப்பான்மை மாறி சர்வ தேசிய உணர்ச்சி வளர்ந்துவரும் இத்தருணத்தில் வகுப்பு வேற்றுமைகளுக்கு இடங்கொடுத்து வராமல் வகுப்பு ஒற்றுமைக்குப் பாடுபடவேண்டும் என எல்லா வகுப்புத் தலைவர்களையும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

# சீனத்தில் அமளி

## அமெரிக்கர் விலகத் தீர்மானம் அப்படிச் செய்தால் இனி நிகழ்வது என்ன?

### ருஷியா உள்ளுக்கு நுழையுமா?

அதிர்ஷ்டம் கெட்ட சீனம்! உலகின் நாலில் ஒருபங்குமக்களையுடைய இத்தேசம், மனித நாகரிகத்துக்கு வேண்டிய சகல வலப் பொருள்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் இக்கண்டம், ஓர் கண்டத்துக்கு ஆளாகியிருக்கிறது. அங்கு உள்ள உள்நாட்டுக்கலகங்களால் அது சீரழிகிறது. சியாங்கே ஷெயிக்கின் ஆட்சியைக் குலைக்க, அங்குள்ள சமதர்மிகள் கங்கணம் கட்டி நிற்கின்றனர். இவர்களுக்கு ருஷியரவின் உதவியுண்டு. இதுகாறும் சியாங்கேஷெயிக் அமெரிக்கரின் உதவியுடன் சமதர்மிகளை எதிர்த்து ஒருவாறு தமது சர்வாதிகாரத்தை நடத்தி வந்தனர். அமெரிக்கரும், சீனத்தில் உள்ள இரு கட்சிகளுக்கு மிடையே ஒற்றுமையை நிறுவி அதன்மூலமாக ருஷியக் கொள்கைகளைத் தூரகிழக்குப்பகுதியிற் பரவவிடாமல் தடுக்கத் தம்மால் ஆன முயற்சிகளை எல்லாம் செய்தனர். ஆனால் அவர்களின் முயற்சிகள் யாவும் பிரதிகூலம் அடைந்தன.

இந்த நிலைமையைக் கண்டு அமெரிக்கர் பிச்சை வேண்டாம் நாயே நாயைப் பிடி என்றவன் சீலமாகத் தாம் இனி சியாங்கே ஷெயிக்கிற்கு உதவி புரிவதை விடுத்து, வெளியேறுவது என்று இப்போது நிச்சயித்து விட்டனர். அவர்கள்வெளியே போவரானால், சீனத்தில் நடக்கப் போவது என்ன? ருஷியா உள்ளுக்கு நுழையும் தனது செல்வாக்கை நிலைநாட்ட முயற்சிக்கும். சீனம் மீண்டும் அல்லோல கல்லோல நிலை அடையும்.

---

### கல்விச் செலவுக்கு 200கோடி ரூபா

இந்தியாவில் உள்ள சகல பிள்ளைகளுக்கும் அரசாங்கத்தின் பொறுப்பிலே இலவசமாகக் கல்வியூட்டுவதற்கு ஆண்டுதோறும் 200 கோடி ரூபா செலவாகுமென்று பண்டிதர் ஜவஹர்லால் தலைமையில் உள்ள தேசிய நிர்மாணச் சபை அறிவிக்கின்றது. இந்தியர் கைக்கு அதிகாரம் வந்ததும் இலவசக் கல்வி முறையை ஏற்படுத்துவதே பண்டிதர் நேருவின் நோக்கம்,

---

### ஜெர்மனியில் பிரிட்டிஷ் போர்வீரர் அக்கிரமம்

ஜெர்மனியிலே பிரிட்டிஷ் போர்வீரர் செய்யும் அக்கிரமங்களைக் கண்டு சகியாத, அவர்களுக்கெனஅங்கேயிருக்கும் மதபோதகரான ஜியோப்பிறே டிறாயிற் என்பவர் பின்வருமாறு பிரலாபிக்கின்றார்.

"இந்தப் போர் வீரர்கள் தங்கள் பணவருவாய்க்காக ஜெர்மன் மக்களைத் துன்பறுத்துகின்றனர். அது மாத்திரமா? தங்கள் மிருக இச்சையைப் பூர்த்தியாக்க, ஜெர்மன் பெண்களை வியபிசாரிகளாக்குகின்றனர். இந்தப் போர்வீரர் ஆண்டவனைத் தொழுது அவனருள்பெற முயற்சித்து நல்லொழுக்கங்களை மேற்கொள்ளாவிட்டால், இவர்களுக்கு எக்காலத்தும் மன்னிப்புக் கிடைக்க மாட்டாது.

---

### அப்பிள்கள் வருகின்றன

பெரும்தொகையான அப்பிள் பழங்கள் ஆஸ்திரேலியாவில் இருந்து வருகிற 21ந் திகதி கொழும்புக்கு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்க்குக் கடிதங்கள்

# நீர்வேலியில் நெசவுத் தொழில்

ஐயா,

9-8-46 ல் தங்கள் பத்திரிகையில் வெளிவந்த இச் செய்தியையிட்டு நான் சில குறிப்புக்களை வாசகர்களுக்குத் தெரிவிக்கவேண்டியிருக்கிறது.

உங்கள் நிருபரின் செய்திப்படி கமத்தொழிலாளர் மகாநாட்டின் தீர்மானத்தின் பயனாக மாத்திரமே அரசாங்கம் நீர்வேலி நெசவுத் தொழில் நிலையத்தை ஆரம்பித்ததெனப் புலப்படுகிறது. இவ்வித எண்ணம் முழுவதும் சரியல்லவென்பதை நான் எடுத்துக் கூறவேண்டியவனாக இருக்கிறேன்.

முதலாவது, நீர்வேலியில் இந்நிலையம் தொடங்கப்படுவதற்குப் பிரதான காரணராயிருந்தவர் திரு அத்தியார் அருணாசலமாவர். கமத்தொழிற் சங்கத்தார் நீர்வேலியில் நெசவுச்சாலையை அமைக்கும் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு முன்பே ஸ்ரீமான் அத்தியார் அருணாசலம் அவர்கள் இச்சாலையை நிறுவுவதற்கேற்ற பல முயற்சிகளைச் செய்தார். இதற்கத்தாட்சியாக அரசாங்கம் நெசவுத் தறிகளையும் உபகரணங்களையும் அவருடைய விலாசத்துக்கே அனுப்பியிருந்தது. யாழ்ப்பாணம் — பருத்தித்துறை றோட்டில் செல்பவர்கள் காணக்கூடிய விதமாக, இப்பயிற்சி நிலையம் திரு. அத்தியார் அருணாசலமவர்களின் ஆங்கில - தமிழ்ப் பாடசாலைக் கட்டடமொன்றில் தொடங்கப்பட்டுத் இப்போதும் அவ்விடத்தில் இருக்கிறதென்பது வெளிப்படை. இந்நிலையத்தைத் தொடங்குவதற்குத் தனது கட்டடத்தை உதவி இந்நெசவுத் தொழில் வளர்வதற்குப் பிரதான காரணராகவிருந்த திரு அத்தியார் அருணாசலம் இந்நிலையத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பொறுப்பு ஏற்றவர் என்பதைத் தங்கள் நிருபர் இலகுவில் அறிந்திருக்கக்கூடும்.

இரண்டாவது, இந்நிலையம் தொடங்கி வளர்வதற்கு இதன் இடம் பெரிய உதவியாகவிருந்தது. நிலையந் தொடங்கிய காலத்தில் நிலயத்துக்கு இடமளித்ததோடு நிலையத்தில் மாணவ மாணவிகள் சேரவேண்டுமென்று வற்புறுத்தி அதிற் பிள்ளைகளைச் சேரும்படி செய்தவர் மேற்கூறிய அருணாசலமும் அவரது ஆங்கில தமிழ்ப் பாடசாலைகளின் ஆசிரியருமே. இவ் வுண்மையை யிட்டுத் தங்கள் நிருபர் மௌனம் சாதித்தது யாதுகாரணம் பற்றியோ? இவ்வாசிரியர்களின் அபிப்பிராயத்தை அறிவதற்கு உங்கள் நிருபர் எத்தனித்தாரா? இந்நிலையத்திற்கு அருகாமையிலிருக்கும் பாடசாலைகளிற் கடமையாற்றும் ஆசிரியர்களின் அபிப்பிராயம், இந்நிலையத்தின் வளர்ச்சியைப் பற்றி அறிவதற்கு மிகவும் முக்கியமானதென்பதை மறுக்க முடியுமா? இவ்வாசிரியர்களின் ஒத்துழைப்பின் பயனாக மாணவர்கள் சேர்க்கப்பட்டு இந்நிலையம் வளர்ச்சி பெற்றது என்பதைத் தங்கள் நிருபர் மறுக்க முடியுமா? "இந்துசாதன நிருபர்" என்ற ஹோதாவில், மனேஜர் திரு. அருணாசலத்தையும் அயலில் கடமை பார்க்கும் ஆசிரியர்களையும் தங்கள் நிருபர் கண்டாரா?

மூன்றாவதாக, லாபத்தின் ஓர் பகுதி பிள்ளைகளுக்குக் கொடுபட்டதற்கு ஓர் காரணம் திரு. அருணாசலம் அவர்கள் கட்டடத்திற்கு வாடகை வாங்காது விட்டமையே. வசதியான ஓர் பெருங் கட்டடத்தை வாடகையின்றி நிலயத்தின் வளர்ச்சிக்குதவிய திரு. அருணாசலத்தின் பேருதவியை மறைத்தல் அல்லது மறுத்தல் தகுமா?

நாலாவதாக, மாகாண அதிபர் திரு. குமாரசுவாமியின் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்புவிழா சிறப்பாக நடைபெறுவதற்கு ஆங்கில தமிழ்ப் பாடசாலை மனேஜரும் ஆசிரியர்களும் பெரும் உதவியாகவிருந்தனர். இவர்களின் ஒத்துழைப்பை வேண்டிப் பெற்றே, பயிற்சி ஆசிரியர் இவ்விழாவைச் சிறப்பாக நடாத்த முடிந்தது.

ஐந்தாவதாக, இத்தகைய வளர்ச்சியின் ஏதுவாகிய நெசவு நிலைய - ஆங்கில - தமிழ்ப் பாடசாலைகளின் ஒத்துழைப்புங் கூட்டுறவும் சென்ற சில காலமாக இல்லாமற் போகவே நெசவு நிலையம் கூடிய வளர்ச்சியடையவில்லை. 18 மாணவர்களிலிருந்து தற்போது 14 மாணவர்கள் பயிற்சி பெற்றால் அது வளர்ச்சியைக் காட்டுகிறதா? மேலே குறிக்கப்பட்ட நெசவு நிலைய, ஆங்கில - தமிழ்ப்பாடசாலைகளின் ஒத்துழைப்பின் மூலம் இந்நெசவு நிலையம் அதிக முன்னேற்றமடையக் கூடும். இவ் விஷயத்தையிட்டுத் தங்கள் நிருபர் குறித்த பாடசாலைகளின் ஆசிரியர்களை வினவினால் உண்மைநிலையை அறியமுடியும்.

மேலும் "நெசவுத் தொழில் மாணவர் ஐக்கிய சங்கம்" ஸ்தாபிக்கப்பட்டதெனத் தங்கள் நிருபர் கூறுகிறார். ஏதோ சில சூழ்ச்சிகளின் பயனாக இச்சங்கத்தலைவர் கடந்த இரு கூட்டங்களிற் பங்குபற்றவில்லையென்றும் இனிப்பங்குபற்ற உத்தேசிக்கவில்லையென்றும் வதந்திகள் உலாவுகின்றன. மேலும் அச்சங்கம் ஐக்கிய சங்கமாக இன்னும் பதிவு செய்யப்படவில்லையென அறிகின்றேன்.

இங்ஙனம்

நீர்வேலி வாசி

நீர்வேலி வடக்கு

12-8-46.

*

## அனுதாபக் குறிப்பு

ஐயா,

இந்துசாதன உத்தியோக சாலையின் கௌரவ அதிபராயிருந்த ஸ்ரீபொன்னுசாமிப்பிள்ளையவர்களின் மரணத்தைத் தங்கள் பத்திரிகை வாயிலாக அறிந்து துக்கித்தேன். 1944ம் ஆண்டில் நான் யாழ்ப்பாணஞ் சென்றபோது இந்துசாதன அச்சுக்கூடத்திற்குப் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தரோடு போனேன். அச்சமயம் மானேசராயிருந்த பொன்னுசாமிப் பிள்ளையவர்களை முதன்முதல் பார்க்கவும் பழகவும் நேர்ந்தது.

சுகவீனங் காரணமாக இவர் சென்னைக்குச் சில மாதங்களுக்கு முன்னர் வந்து ஓர் உணவுச்சாலையில் தங்கியிருந்தார். நடமாடக்கூடிய நிலைமையில் இல்லாதபடியால் அவர் தன்னுடைய வேலையாளை என்னிடம் அனுப்பி என்னைத் தான் தங்கியிருக்கும் இடத்திற்கு வரவழைத்தார். அவரைப் பலமுறை நான் போய்ப் பார்த்து வந்தேன். இந்துசாதன முன்னேற்றத்தின் நிமித்தம் பல விஷயங்களைப் பேசினார். உணவுச்சாலையில் தனக்குக் கிடைக்காத சில சௌகரியங்களை அமைத்துத் தரும்படி வேண்டினார். அப்படியே என்னாலியன்ற உதவிகளைச் செய்தேன். 19-6-46 ல் அன்று அவரைக் கடைசியாகக்கண்டேன். அன்று அவர் தான் சில தினங்களில் யாழ்ப்பாணத்திற்குத் திரும்ப உத்தேசித்திருப்பதாகவும், போவதற்கு முன்னே எனது இல்லத்திற்கு வந்து விடைபெற்றுச் செல்வதாகவுங் கூறினார். ஆனால், அவரைப் பிறகு யான் காணவில்லை. சுகவீனங் காரணமாக அவர் சடுதியிற் புறப்பட்டு இருக்கலாமென்று எண்ணினேன். அது இப்போது உண்மையென்றே தெரிகிறது.

யான் அவரோடு அளவளாவிய மட்டில் அவர் நேரியமுறைகளை அனுசரிப்பவராகவே காணப்பட்டார். இந்துசாதன பரிபாலனத்திற் பேரூக்கமும், சிரத்தையும் உள்ளவர். இந்துசாதனத்திற்காகப் புது அச்செழுத்துக்களை வார்ப்பிக்கவேண்டும் என்னும பேரவாவினால் சென்னை நெல்சன் கம்பெனியின் சொந்தக்காரரை வரவழைத்து அவரோடு சில ஒழுங்குகளைச் செய்தார். தான் நோயால் பீடிக்கப்பட்டு வருந்திய நிலைமையிலும் இந்துசாதனத்தை அவர் மறவாமை பெரிதும் போற்றப்படத்தக்கதாம். இத்தகைய உண்மையான உழைப்பாளியை இந்துசாதனம் இழக்க நேர்ந்தமை வருந்தத்தக்கதாகும். இவர் பிரிவாற்றாமையால் வருந்தும் இவரது தம்பியாருக்கு எனது அனுதாபத்தைத் தெரிவிக்கலானேன்.

இங்ஙனம்

சே வெ. ஜம்புலிங்கம்பிள்ளை


# சிறந்த சங்கீதக் கச்சேரி

கொழும்பு இசைக்கலை மன்றம், ஸ்தாபிக்கப்படவிருக்கும்
இந்திய இலங்கைக் கலாசார விருத்திச் சங்கம்
என்பவற்றின் உதவிக்காக

தென்னிந்தியாவின் சங்கீத நட்சத்திரம்
இசைவாணி

## எம். எல். வசந்தகுமாரியின்

அரிய சங்கீதக்கச்சேரி 1946ம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 18ந் திகதி
ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6½ மணி தொடக்கமாக

**யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில்**

அரசாங்கசபை அங்கத்தவர்

**ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களதும்
அவர்கள் பாரியாரதும் ஆதரவில் நிகழும்**

பிரவேச வேதன விகிதம்

பிரத்தியேக ஆசனம் ரூ. 10
ஏனைய ஆசனங்கள் ரூ. 5, 3, 2.

பிரவேசச் சீட்டுக்களும், ஆசன ஒழுங்குக் கிரமமும், யாழ்ப்பாணம் பெரியதெரு அப்போதிக்கரீஸ் கம்பனியாரிடம் பெறற்பாலன.

(Mis 148 13, 16)


## விளம்பரம்

## உணவுக் கட்டுப்பாடு

1946ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் (9-வது வார உணவு வீதம்) உணவு அளவு பின்வருமாறு:-

| வகுப்பு | அரிசி (கொத்து) | | நெல்லும் (கொத்து) | கோதுமைமாவும் (றூத்தல்) | முழுக்கோதுமை (கொத்து) | | குரக்கன் (கொத்து) |
|---|---|---|---|---|---|---|---|
| குழந்தை | $\frac{1}{2}$ | அல்லது | 1 | $\frac{1}{2}$ | $\frac{1}{4}$ | அல்லது | $\frac{1}{4}$ |
| பிள்ளை | $\frac{3}{4}$ | ,, | $1\frac{1}{2}$ | $\frac{3}{4}$ | $\frac{3}{8}$ | ,, | $\frac{3}{8}$ |
| சாதாரணம் | 1 | ,, | 2 | 1 | $\frac{1}{2}$ | ,, | $\frac{1}{2}$ |
| வேலையாள் | $1\frac{1}{4}$ | ,, | $2\frac{1}{2}$ | $1\frac{1}{4}$ | $\frac{5}{8}$ | ,, | $\frac{5}{8}$ |

முழுக்கோதுமையில்லாதுபோனால் குரக்கன் கொடுக்கப்படும். குரக்கனும் இல்லாது விட்டால் வேறு உப உணவுப் பொருட்கள் கொடுக்கப்படமாட்டாது. இதற்கு முன்பு முழுக்கோதுமை அல்லது குரக்கனுக்குப் பதிலாகக் கோதுமைமா கொடுபட்டதுபோல இனிமேல் கொடுக்கப்படமாட்டாது.

எம். ஸ்ரீகாந்தா

யாழ்ப்பாணம் உப உணவுக் கட்டுப்பாட்டுத் தலைவருக்காக.

யாழ்ப்பாணம் 13 8-46.

(G 55 16)

## கொழும்பு விவேகானந்த சபை

ஷை சபையாரால் விய வருஷம் பங்குனிமீ நடத்தப்பெறவிருக்கும் சமயபாடப் பரீக்ஷைக்குரிய பாடவிதானம்.

கீழ்ப்பிரிவு

1 சைவ வினாவிடை முதற்புத்தகம்—நாவலர், அல்லது சைவபோதம் முதற் புத்தகம்—திரு சு. சிவபாத சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியது
2 திருவருட்பாத் திரட்டு—விவேகானந்தசபை வெளியீடு கீழ்ப்பிரிவுக்குரிய பாகம் மட்டும்

மத்திய பிரிவு

1 சைவபோதம் இரண்டாம் புத்தகம்—திரு. சு. சிவபாத சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியது. அல்லது சைவப்பிரகாசிகை 5ம் புத்தகம்—பிரமஸ்ரீ ச குமாரசாமிக் குருக்கள் இயற்றியது
2 மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்—திரு ம. வே. திருஞானசம்பந்தன் அவர்கள் இயற்றியது (பக்கம் க-அ௰)
3 திருவருட்பாத் திரட்டு விவேகானந்தசபை வெளிவீடு மத்திய பிரிவுக்குரிய பாகம் மட்டும்

மேற்பிரிவு

1 திருவருட்பயன்—திரு. சு சிவபாதசுந்தரம் அவர்கள் இயற்றியவுரையுடன்
2 கந்தபுராண விளக்கம்—திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் இயற்றியது
3 திருவாசகமணிகள்—திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் இயற்றியது
(திருச்சதகம் முதல் பிடித்த பத்து வரை சபைவெளியீட்டில் பக். ௬௪ சு௬)

என்று மேற்படி சபைக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### நேருவுக்குப் பொறுப்பு

இந்திய அரசியல் வானத்தில் இது காறும் இருந்த சந்தேகமான நிலை இராஜப்பிரதிநிதி வேவலின் இராஜதந்திரத்தால் இப்போது அகன்று விட்டது எனலாம். இந்தியாவிலே எந்தக் கட்சியினர்க்குக் கூடிய செல்வாக்கிருக்கிறதோ, அந்தக் கட்சிக்கே அரசியல் நடத்தும் பொறுப்பைக் கொடுக்க. பிரிட்டிஷ் மந்திரிசபையின் அநுசரணையுடன் முன் வந்து விட்டார். இந்தியாவின் மத்திய அரசாங்கத்தை அமைத்துநடாத்த அவர் காங்கிரஸ் தலைவரான பண்டிதர் ஜவஹர்லால் நேருவைக் கேட்டிருக்கிறார். நேருவும் அப்படியே செய்வதாக வாக்களித்துவிட்டார்.

●

### எப்படியான அரசாங்கம்

நேரு அமைக்கும் அரசாங்கம் எப்படியானதாக விருக்கும்? இந்தியாவிலே முஸ்லீம்களிற் பெரும்பான்மையினரின் ஆதரவைக் கொண்ட முஸ்லீம்லீக்கையும் இப்படி அமைக்கும் இரசாங்கத்திற் சேர்க்கத்தான் வேண்டும் என்பதை நேரு உணருகிறார் எனவே, அவர் இந்த விஷயத்தில் ஒத்துழைத்து, அரசாங்கத்தை நடாத்தும் வேலையில் காங்கிரசுக்கு உதவிபுரியும்படி லீக் தலைவரான ஜின்னுவுக்கு ஓர் கடிதம் எழுதியிருக்கிறார் எனத் தெரிகிறது. ஆனல் ஜின்னு சாய்பு, இந்தக்கோரிக்கைக்கு இணங்குவாரா? அவர் தான் இதுகாறும் கொண்டிருந்த முரட்டுப் பிடிவாதக் குணத்தை விட்டுக் கீழே இறங்கி, உண்மை நிலையை உணர்ந்து ஒத்துழைப்பை அளிப்பாரா? அப்படியான நல்ல புத்தி அவருக்கு உதிக்கும் என்பதற்கான உற்பாதம் ஒன்றும் இதுவரை எழவில்லை.

●

### ஜின்னு மறுத்தால்

ஜின்னு சாய்பு, நேருவின் கோரிக்கைக்கு மறுத்தால் நடப்பது என்ன? முஸ்லிம் லீக்கைப் புறக்கணித்து, ஏனைய முஸ்லீம்களைச் சேர்த்து, மற்றும் சிறுபான்மையினரையும் கொண்ட ஓர் அரசாங்கத்தை நேரு நிறுவுவார். நிலைமை இன்னும் இரண்டொரு தினங்களில் தெளிவடையும். ஆனல் இது மாத்திரம் நிச்சயம் முஸ்லிம் லீக் இனியும் தன் முரட்டுக் குணத்தினுல் இந்திய அரசியல் முன்னேற்றத்தைத் தடை செய்ய முடியாது. முஸ்லிம் லீக் விரும்பினுல் என்ன விட்டால்என்ன, மத்திய அரசாங்க வேலையும், அரசியல் நிர்மாண சபை வேலையும் இனி நடந்தே தீரும் எனத் திடமாக நம்பியிருக்கலாகும்

●

### சிறந்த மார்க்கம்

இராஜப் பிரதிநிதி ஆற்றியுள்ள கருமம், பிரிட்டிஷ் பத்திரிகைகளாலும் அரசியல் வாதிகளாலும் மிக்க உற்சாகத்துடன் வரவேற்கப்படுகிறது. இராஜப்பிரதிநிதி செய்துள்ளது சரியான கருமமே என்று அகில உலகமும் போற்றுகிறது. இதுஇவ்வாருக, முஸ்லிம் லீக் இனி என்ன செய்யும். மத்திய அரசாங்கத்திலும், அரசியல் நிர்மாணசபையிலும் சேராமல் இருப்பது என்ற வீண், பயன்றராக் கொள்கையை இனியும் அநுட்டிக்குமா? இன்று இந்தியாவெங்கும் நேரடிப் போராட்டத்தினமாகக் கொண்டாட முஸ்லிம் லீக் தீர்மானித் திருக்கிறது. இன்று நடக்கும் கருமங்களிலிருந்து முஸ்லிம் லீக்கின் வருங்கால நடவடிக்கையை ஒருவாறு அவதானிக்க முடியும்.

●

### நேரு-ஆஸாத்-சர்தார் மந்திராலோசனை

இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்துவது சம்பந்தமாக காங்கிரஸ் தலைவர், இராஜப் பிரதிநிதி வேவலிடம் சமர்ப்பிக்கவிருக்கும் யோசனைகளைப் பற்றி தலைவர் பண்டித நேரு, மௌலான ஆஸாத், சர்தார் பட்டேல் ஆகிய மூவரும் ஒன்றுகூடி விவாதித்தனர். காங்கிரசுக்கு 6 ஸ்தானங்களும், இதர சிறுபான்மையினருக்கு 3 ஸ்தானங்களும் இருக்கவேண்டும் என்ற பழைய திட்டம் மாறுதலின்றி அப்படியே இருப்பதாகத்தெரிகிறது டில்லியில் சமீபத்தில் நடைபெற்ற அரசியல் சமரச சம்பாஷணைகளின் போது சமர்ப்பிக்கப்பட்ட காங்கிரஸ் நியமனஸ்தர்களின் அட்டவணையில் மாறுதல் எதும் செய்யப்படமாட்டாதெனத் தெரிகிறது.

---

### 5 உப தலைவர்களாம்!

மிஸ்ரர் சேனனுயக்காவின் ஐக்கியதேசீயக் கட்சியில் ஐந்து உபதலைவர்கள்இருப்பாராம் ஸ்ரீமான்கள் பண்டாரநாயக்கா, ஜே எல். கொத்தலாவலை, அ மகாதேவா ஜோர்ஜ் டீ சில்வா, T. B. ஜயா என்பவர்களே இந்த ஐவராம்

---

## பண்டிதர்
## ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்
# அறுபதாமாண்டு நிறைவு விழா நிதி

இந் நிதிக்குப் பணமுதவுவோரின் பெயர், விலாசம், பணத் தொகை முதலியன:-

| திருவாளர்கள்: | ரூ. | ச |
|---|---|---|
| முன்கணக்குப்படி | 415 | 00 |
| முதலியார் S. கந்தையா நல்லூர் | 10 | 00 |
| க. சின்னத்துரை நீராவியடி | 5 | 00 |
| K. அருளம்பலம் வைத்தியர் வல்வெட்டித்துறை | 5 | 00 |
| M. E நடராசா ஆசிரியர் நாவலர் வித்தியாசாலை | 5 | 00 |
| க, வை. ஆத்மநாதசர்மா ,, ,, | 5 | 00 |
| சி. வைத்தியலிங்கம் ,, ,, | 10 | 00 |
| அ. இளையப்பா விவாகப்பதிவுகாரர் நல்லூர் | 10 | 00 |
| M. அருளம்பலம் உனுப்பிட்டிமில்ஸ் நீர்கொழும்பு | 10 | 00 |
| ஆக | 475 | 00 |

மேற்படி பண்டிதரவர்களின் மாணுக்கர்கள் அபிமானிகளாயுள்ளாரனைவரும் இந் நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்ற பணம் உதவுக. மேலும் பணம் உதவும் அன்பர்கள் தம் பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி மேற்படி நிதித் தனதிகாரியவர்கள் விலாசத்திற்கனுப்புக.

கா. கந்தையா, தலைவர். — க. சி. சுப்பிரமணியம், காரியதரிசி. — அ. கனகசபாபதி, தனதிகாரி.

ஷை பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் சபை, வண்ணுர்பண்ணை.

Mis 131 16-8-46

# தண்ணீருக்கும் கூப்பன்

## ஊர்காவற்றுறையில் தண்ணீர்ப் பஞ்சம்

குடிக்கிற தண்ணீருக்கும் கடைசியாகக் கூப்டன் வந்து விட்டது ஊர்காவற்றுறையிலும், காரம்பனிலும் தண்ணீர்ப் பஞ்சம் மிகக் கடுமையாக விருக்கிறது. சென்ற சனிக்கிழமை தொடக்கம் நாரந்தனையிலிருந்து, தண்ணீர் கொண்டுவந்து ஆளுக்கு ஒரு கலன் தண்ணீர் வீதம் கொடுக்கப்படுகிறது. கூப்பன் உள்ளவர்களே தண்ணீர் கொடுக்கப்படுவர்.

---

# உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

பெயர விழித்தான்: ஏனையோரெல்லாரும் இராமச்சந்திரனையும் அந்த அம்மாளையும் மாறிமாறி உற்று நோக்கினர்; அந்த அம்மாள் பின்னருந் தன் வரலாற்றைச் சொல்லுகிருள்;] இப்பிரபு என் சங்கீதத்தைக் கேட்டு மெச்சிப்போலும். எனக்கு அந்தநேரத்திற் சன்மானஞ் செய்தார்; நான் இவர் தந்ததை அன்புடன் ஏற்றுக்கொண்டு "அடுத்தது காட்டும் பளிங்கென்ன நெஞ்சம் - கடுத்தது காட்டும்முகம்" என்றபடி, இவரைப் பார்த்த மாத்திரத்தே இவர் ஒரு உத்தம புத்திரரென்று எனக்குப் புலப்பட்டது; இவர் மூலமாக அந்தப் பிராமணவீடாகிய சிறைச்சாலையி லிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்று நினைத்து இவரைத் தனியே காண விரும்பினேன்; கண்டும் என் குறைகளை யெல்லாம் எடுத்துச் சொல்ல அந்த நேரத்திற் சமயம் வாய்க்கவில்லை; ஆனல் இவர் தாம் மீண்டு ஊருக்குப் போகும் போது என்னைக் கண்டு போவதாக வாக்களித்தார்; இவருடைய வரவை எதிர்பார்த்த வண்ணம் இருந்தேன்; நாள் பல சழிந்தன மீண்டு வரக் கண்டிலேன்; அதனுல் என் வேண்டுகோளை மறந்து இவர் ஊருக்கு மீண்டுபோய்விட்டாரோவெனச் சந்தேகங் கொண்டேன்; இற்றைக்குச் சிலதினங்களுக்கு முன்னர், என் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டேனுய், நான் இருந்த வீட்டுக்காரருக்குச் சொல்லாமல் எனக்குரிய கைக்கடங்கிய பொருள்களையும் எடுத்துக் கொண்டுநள்ளிரவில் வீட்டைவிட்டுப் புறப்பட்டு விரைந்து நடந்து அந்தப் பட்டினஎல்லையைக்கடந்து, அணிந்திருந்தவுடையோடு சஞ்சரித்தால் என் மானத்திற்கும் உயிருக்கும் ஆபத்து வருமெனக் கருதி, அதனை அகற்றி வைத்துக்கொண்டு முந்தியே நான் தேடி அந்தரங்கமாக வைத்திருந்த இந்தக் காவியுடை உருத்திராக்கமென்னு மிவைகளைப் பூண்டுகொண்டு சில புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கியும் சில சிவத்தலங்களைத் தரிசித்தும் வரும்மார்க்கத்திலே என் அதிர்ஷ்டவசமாக உங்களைச் சந்தித்தேன்; இதுதான் என் வரலாறு" என்று சொல்லிமுடித்தாள்; "அம்மா, உம்முடைய நாமதேயமென்ன?" என்று இராமச்சந்திரன் கேட்க, என்பெயரை மறந்துவிட்டீர்களா? என்னை "இங்கிதம்" என்று சொல்லுவார்களென்றுள் அந்த அம்மாள்; "என் அருமைத் தங்கை இங்கிதம் நீதானு அம்மா!" என்று இராமச்சந்திரன் கேட்க, "ஆம், அண்ணு" என்றுள் அந்த அம்மாள். (வரும்)

# நூற்குறிப்பு

### சரித்திர பாடம்

(ஐந்தாம் புத்தகம்)

இத் தமிழ் வசன பாடநூல், வித்தியாபகுதியாரின் புதிய கல்வித் திட்டம் நிபந்தனைகளென்னு மிவற்றிற் கமைய, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சரித்திராசிரியராகிய திரு. ச. ஜயவீரசிங்கம் (B. A. Hons) அவர்களாற் புதிய முறையில் எழுதப்பெற்றுள்ளது. இதன்கண், சரித்திரமென்றால் என்ன? என்பது முதலாக இலங்கையில் விவசாய விருத்தியீருக 33 பாடங்களுள்ளன: இலங்கை சம்பந்தமான சரித்திரங்களே பெரும்பான்மையும் இந்நூலகத்தில்எடுத்துக்காட்டப்பட்டுள்ளன; இயைந்த இடங்களிற் சிறந்த சித்திரங்களும் இடப்பட்டுள்ளன; நூல் குறித்த வகுப்பிற் பயிலும் மாணவர்க்குப் பெரிதும் பயன்படத்தக்கது; பிரதிகள் தெளிவான எழுத்துக்களில் அழகுற அச்சிடப்பட்டுள்ளன. பிரதியொன்றன் விலை ரூபா 1-50 சதம், (1 ரூபா 8 அணு) பெற விரும்புவோர் மேற்படி ஆக்கியோனிடத்தும், இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்.

எமது பார்வைக்குதவிய பிரதியை உவந்தேற்றும்.

---

## இன்று நல்லைக்கந்தன் 15-ம் உற்சவம்

முண்டக மலர்ந்த தன்ன
மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன்
மவுலியுங் கோலமார்பும்
எண்டரு காமீராறும் இலங்கெழிற்
படைகள் யாவுந்
தண்டையுஞ் சிலம்பு மார்க்குஞ்
சரணமுந் தெரியக் கண்டான்.

---

## வரவுசெலவுத் திட்டம் நிறைவேறி விட்டது

இலங்கை வரவுசெலவுத் திட்டம் இரண்டாம் முறையாகச் சென்ற புதன்கிழமை அரசாங்கசபையில் நிறைவேறிவிட்டது.

## தங்கம் வெள்ளி இறக்குமதித் தீர்வைக் குறைவு

இந்தியாவில் தங்கமும், வெள்ளியும் அதிகமாக இறக்குமதியாவதின் பொருட்டு தங்கத்தின் இறக்குமதித் தீர்வை தோலாவுக்கு இருபத்தைந்து ரூபாயாக இருந்ததைப் பன்னிரண்டரை ரூபாயாகவும் வெள்ளியின் இறக்குமதித் தீர்வை அவுன்ஸிற்கு எட்டணுவாக இருந்ததை நான்கு அணுவாகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்வைக் குறைவு உடன் அமுலுக்கு வருகிறது

## பேராசிரியர் மரணம்

உலகப் பிரசித்திபெற்ற ஆங்கில நூலாசிரியரான மிஸ்ரர் எச். ஜீ வெல்ஸ் தமது 79-ம் வயதில் சென்ற செவ்வாய்க்கிழமை மரணமானுர் அணுக்குண்டு உலகிலே செய்யும் நாச வேலைகளைப்பற்றி இவர் 1904-ம் ஆண்டிலேயே தம் நூல் ஒன்றிற் குறிப்பிட்டிருக்கிறுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

## வெள்ளி ஆகஸ்ட் 16

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே வி ராக்கிரிசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 டி ராஜரத்தி பாட்டு 9 முடிவு.

1 ககம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 வி வேதவல்ல பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 வி வேதவல்லி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 கே வி ராக்கிரிசாமி பாட்டு 5.40 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 இரு குரல் இசை 7 15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 திருவிடமருதூர் வீரசாமிபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 எஸ் பாலகிருஷ்ணன் பாட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை 10-30 முடிவு.

## சனி ஆகஸ்ட் 17

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி மஹாதேவன்வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 வி ஏ சாம்பசிவன் பாட்டு 8.30 சித்ரகானம் 9 முடிவு.

1 கே ஏ. தக்ஷிணாமூர்த்தி வயலின் 1.50 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2.05 ஆர் ஸ்ரீரங்கம் ஐயங்கார் பாட்டு 2.45 முடிவு.

மாலை: 5 ஆர் ஸ்ரீரங்கம் ஐயங்கார் பாட்டு 5.40 திருவிளையாடல் புராணவிளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி ஏ சாம்பசிவன் பாட்டு 7-15 ரேடியோ அறிமுகம் 7.20 தமிழில் செய்திகள் 7-45 மதராஸில் உள்ளபடி (முசிரி சுப்ரமண்ய ஐயர் பாட்டு) 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 டி எஸ் மரியானந்ரம் பாட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 இலசவேளை 10 30 முடிவு.

## ஞாயிறு ஆகஸ்ட் 18

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கல்லிடைக்குறிச்சி எஸ் லக்ஷ்மி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருவெண்காடு சுப்ரமணியபிள்ளை நாகஸ்வரம் 8-30 வேதாரண்யம் ராமசாமி ஸ்ரீனிவாசன் பாட்டு 9 முடிவு.

12 மன்னன் இவன் யாரோ 12.30 அகிருஷ்ணசாலி நாடகம் 12.45 ஸ்வயம்வர மண்டபத்தில் 1 மணிமலர் 1 25 சிங்கமும் சுண்டெலியும் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பெண்உலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 மின்னிசை 2.30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை: 5 கே எல் ரங்கதாஸ் புல்லாங்குழல் 5-40 தேவாரங்களை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 கல்லிடைக்குறிச்சி எஸ் லட்சுமி பாட்டு 7-15 ஆகாரமானவை 7.30 தமிழில் செய்திகள் 7-45 டி வி நமசிவாயம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ரதியின் சுவை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 கே எல் ரங்கதாஸ் புல்லாங்குழல் 10-30 முடிவு.

## திங்கள் ஆகஸ்ட் 19

காலை: 7.15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 திருச்சேறை ஆர் கிருஷ்ணமூர்த்தி, ஆர் ராமசாமி நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 தஞ்சாவூர் கே பொன்னையாபிள்ளை பாடல்கள் வாஞ்ஞெவி 8-30 டி வி ஜனகம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 டி வி ஜனகம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 திருச்சேறை ஆர் கிருஷ்ணமூர்த்தி, ஆர் ராமசாமி நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 பழனி விஜயலட்சுமி 7.15 சடல் திரவியம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 தேசமங்கலம் சுப்ரமண்ய ஐயர் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 புல்லாங்குழல், கிளாரினெட் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசைவேளை 10.30 முடிவு.

## புதிய சகாப்த உதயம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஞானைத் தாம் எதிர்பார்ப்பதாக மிஸ்ரர் கொறியா அன்று கூறினர். சிமந்துஎல்லாரும் வாங்கக்கூடியவிதமாக மலிவாக விற்ருல், இந்த யாழ்ப்பாண மக்கள்தான் கல்வீடுகட்டி, சிமந்தினுல் நிலத்தை மெழுகப்போவது இல்லை. அகில இலங்கையிலுமே அதனைச் செய்வர். எனவே, யாழ்ப்பாண மக்களுக்குத்தான் இச்சிமந்து பயன்படும் என்று கூறுதல் பொருந்தாது. இன்று உணவுக்கு வழியில்லாது, தம் மானத்தைக்காக்க வகையறியாது தவிக்கும் யாழ்ப்பாண மக்கள் இந்தச் சிமந்தை உண்ணப்போகிறுர்களா? அல்லது அதனுல் உடைகள் ஆக்கி அணிய முடியுமா? இந்தத் தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட, அங்கே 170 தொழிலாளர்கள் வேலை செய்தால், அதனைச் சுற்றி ஒன்றிரண்டு கடைகள் இருக்கலாம்; அல்லது சில கள்ளுக்கொட்டில்கள் கிளம்பும். இன்னும் தொழிற்சாலைக்கு வேண்டிய எண்ணெய், கரி முதலாம் சாதனப் பொருள்களை இறக்குமதியாக்கவும், உற்பத்தியான சிமந்தை ஏற்றுமதி செய்யவும் துறைமுகத்தைத் திறந்து, வேண்டிய துறைமுக நிலயங்களை அமைத்தால், அதன் பின் இன்னுஞ்சில தொழிலாளர்கள் அங்கே வந்து வேலை செய்வர். ஆனல், இவை யெல்லாம் வடமாகாணத்து மக்களின் பொருளாதார விஷயத்தில் ஓர் புதிய சகாப்தத்தைக் கொண்டுவருமா? ஓர் புதிய சகாப்தத்தை உதயமாக்குமா?

(வரும்)


# குடைமார்க்ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் கட்டிடங்களுக்கு இன்றியமையாத

## கலீக்கற் ஓடுகள்

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினல் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால்வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினுல் உடையாது. மழையினுல் நீர் பொசியாது. மிகவும் கரிசனையாகவும், நுணுநுணுக்கமாகவும் செதய் ஆராய்ச்சியின் பயனுவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஏஜென்ஸ்'

ஜே. செரூபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.


Mis 243 B 12-3 — 12-9(வெ)


## செவ்வாய் ஆகஸ்ட் 20

காலை 7.15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 டி எஸ் சுப்புலட்சுமி புல்லாங்குழல் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 வாத்ய இசை 8.30 ஏ சேசய்யஸ்வாமி பாட்டு 9 முடிவு.

1 சதம்பம் 1-20 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 வ சீனிவாசன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 சீனிவாசன் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 டி எஸ் சுப்புலட்சுமி புல்லாங்குழல் 5.50 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 நாசமுனி பாண்ட் 7-15 வாங்குவோர் விசாரம் 7-30 தமிழில் செய்திகள் 7 45 கூடாரக்குக் கீழ கூத்து விளக்கு 8 ஸ்ரீகிருஷ்ண ஹனனம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 எஸ் எஸ் பாப சிவம்பிள்ளை பாட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 எஸ் எஸ் பாமசிவம்பிள்ளை பாட்டு 10 நீங்கள் கேட்டவை 10 30 ஒலிபரப்பு முடிவு.


எங்கும்
கியாதிபெற்ற
எமது
ரேடியோ பீடிகளையே
எப்பொழுதும்
உபயோகித்து
ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

எல்லாஊர்களிலும் கிடைக்கும்
மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)

# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப்பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் சட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Mis 25 23-4-46 to 22-3-47)

# தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தட்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் சும்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:


ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4-46—25-10-46 (வெ)

மிகச் சிறந்த புதிய

# ஆர்மோனியங்கள்



விலைக்கிருக்கின்றன

## எந்த சீதோஷ்ண காலத்திலும் பாவிக்கலாம்

சங்கீதக் கருவிகள் உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்

## கல்கத்தா மோகன புளூட் ஆர்மோனியக் கொம்பனி,

484 K K S ரோட், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

(Mis 98 28 6—28-9 வெ)


## நிறப்பெட்டிமுறை நீக்கப்பட்டது

இவ்வருட இறுதியில் நடைபெறவிருக்கும் கொழும்பு நகரசபைத் தேர்தல்களில் வாக்களிப்பது சம்பந்தமாக விசேஷ ஏற்பாடுகளைச் செய்வதற்கானசட்டம் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி சட்டப்பிரகாரம் வாக்குப் பெட்டிகள் வர்ணமிடப்படும் முறை நீக்கப்படுமென்றும் வாக்களிப்பு ஸ்தலம் ஒவ்வொன்றுக்கும் ஒரே ஒரு பெட்டியே வைக்கப்படுமெனவும் தெரிகிறது

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday August, 16, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org